# மறக்க முடியாத மனிதர் திருச்செந்தூரன்


ஆழத்து முத்துக்கள் 114

- தெளிவத்தை ஜோசப் -

**மலையக இலக்கியம் மறக்க முடியாத மனிதர் அமரர் திருச்செந்தூரன் அவர்கள்:**

1960 க்குப் பின் எழுந்த மலையகக்கலை இலக்கியப் புத்தெழுச்சியின் முதற்குரலாக ஒலித்தது கல்கியில் பரிசு பெற்ற அவரது 'உரிமை எங்கே' என்னும் சிறுகதை.

ஈழத்து இலக்கிய வரலாற்றில் 1956ஐ தற்கால இலக்கியத்தின் ஆரம்ப எல்லையாகக் கொள்ளலாம். இந்த ஆண்டில் முதல் முறையாகப் பதவி ஏற்ற அமரர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்காவின் (SWRD) அரசு கலாசார துறையில் காட்டிய ஆர்வமும் தேசிய மொழிகள் (தமிழ் - சிங்களம்) உயர் கல்விக்கான போதனா மொழிகளாக்கப்பட்ட பெருமாற்றமும், அதன் விளை பயன்களுமே 1956 ஐ தற்கால இலக்கியத்தின் எல்லையாகக் கொள்வதற்கான காரணங்கள்.



இந்த மாற்றங்களின் விளைவுகள் சிங்களக் கலை இலக்கியத்துறைகளில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தின. வட கிழக்கு மக்களிடையேயும் தொற்றி வளர்ந்தன. மலையகத்தின் சமூகச் சூழ்நிலை, பொருளாதாரத் தாழ்வு, அரசியல் அநாதை நிலை ஆகிய மும்முனைத் தாக்குதல் மலையகத்தின் குரல்களை அமுக்கி வைத்திருந்தது. மலைநாட்டவரின் அவலம் மிகுந்த வாழ்வியற் பண்புகள் சிறுகதைகளாக, நாவல்களாக மேற்கிளம்பினவென்றாலும் உரத்து ஒலிக்கவில்லை.

உரத்து ஒலிக்காத இம்மலையக எழுத்துக்கள் பற்றி வாய்திறந்து யாரும் பேசவில்லை. இந்த ஆதங்கம், 'காலங்காலமாக நாங்கள் புறக்கணிக்கப்பட்டவர்கள்தானா' என்னும் ஆத்திரம் படித்த மலையக இளைஞர்கள் மத்தியில் பரவலாக ஏற்பட்டிருந்தது.

இந்த படித்த மலையகத்தின் இளைஞர்கள் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், ஒருவரை ஒருவர் நேரில் சந்தித்துக் கொண்டதுகூட இல்லை என்றாலும் மேற்கூறிய ஆதங்கமும் ஆத்திரமும் ஒரு நான்கு வருட கர்ப்பவாசத்தின் பின் ஒரே விதமான நாடித்துடிப்புடன், சமூக உணர்ச்சிப் பிரவாகத்துடன், ஒன்றுபட்ட உத்வேகத்துடன் 1960ம் ஆண்டளவில் பீரிட்டுக் கிளம்பியது.

இதன் முதற்குரல் கல்கியில் பரிசு பெற்று கல்கியில் வெளிவந்த செந்தூரனின் உரிமை எங்கே. அறுபதுகளில் பிரபல்யம்மிக்கதாக இருந்த கல்கிப் பத்திரிகை இலங்கைக்கென நடாத்திய சிறுகதைப் போட்டியில் இவரது உரிமை எங்கே சிறுகதை 3வது பரிசு பெற்றது.

அறுபதுகளில் மேற்கிளம்பிய மலையக எழுத்துத்துறைக்கும், எழுதத் தொடங்கியிருந்த புதிய புதிய எழுத்தாளர்களுக்கும் தமிழகப் பத்திரிகையான கல்கி வெளியிட்ட இந்தக் கதை மிகுந்த உற்சாகத்தைக் கொடுத்தது.

கண்டியை அண்மித்த கலகாவில் ஒரு தேயிலைத் தோட்டத்தில் 30.08.1936ல் பிறந்தவர் திருச்செந்தூரன்.

ஆரம்பகல்வியை மலையகத்திலும் இடைநிலைக்கல்வியை யாழ். இந்துக்கல்லூரியிலும் பெற்று சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் பட்டப்படிப்பை மேற்கொண்டு பட்டதாரியானவர். ஹட்டன் புனித ஜோன் பொஸ்கோ கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கிய இவர் ஒரு நாடகாசிரியரும் கூட.

ஷேக்ஸ்பியரின் ஒத்தேல்லோவைத் தமிழ்ப்படுத்தி மாணவர்களுடன் இணைந்து கல்லூரிகளில் மேடையேற்றியதுடன் ஒத்தெல்லோவாகப் பாத்திரம் ஏற்று நடித்தவர்.

மலையகத்தின் விழிப்புணர்வுக்காகப் பாடுபட்ட இவர் சமூக விமர்சனம்மிக்க நாடகங்களை எழுதி மலையகத் தோட்டங்களில் தொடர்ந்து மேடையேற்றினார். மலையக மக்களின் விழிப்புணர்வுக்காக அரங்கியல் ஆட்டங்களை ஒரு பிரச்சாரக் கருவியாகப் பயன்படுத்தினார். தாளலய நாடகங்களை நெறிப்படுத்தியதுடன் சமூக நாடகங்களையும் நெறிப்படுத்தினார்.

ஒரு நாடகாசிரியராக, நடிகராக, நெறியாளராகப் பணியாற்றிய அமரர் திருச்செந்தூரன் அவர்கள் அரங்கியல் ஈடுபாடு மிக்கவர்.

ஒரு கலைப் பட்டதாரியான இவரின் இந்த அரங்கியல் ஈடுபாடு கொழும்புப் பல்கலைக் கழகம் 1976ல் தொடங்கிய 'நாடகக்கல்வித் தகைமைச்சான்றிதழ்' பாடநெறியில் இணைந்து கற்கும் ஆர்வத்தை ஏற்படுத்தியது.

கொழும்பு வளாகத்தில் 'நாடகமும் அரங்கியலும்' என்னும் துறையில் பட்ட மேற்படிப்பு டிப்ளோமா பெற்றுக்கொண்டார். இந்தத் தொழில் முறை தேர்ச்சியின் மூலம் மலையக மாணவர்களுக்கு நாடகத்துறை பயிற்சி வழங்கும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது.

மலையகத்தில் ஆடப்படும் கூத்துக்களில் 'அர்ச்சுனன் தபசு', 'பொன்னர் சங்கர் கதை', 'காமன் கூத்து' போன்றவைகள் முக்கியமானவை. அதிலும் 'காமன்கூத்து' மிக முக்கியமானது.

காமன்கூத்து, காமன் பொட்டலில் காமன் கம்பம் ஊன்றுதல் என்று ஆரம்பித்து ரதிமன் மதன் திருமணம், அதையொட்டிய செயற்பாடுகள், சிவபெருமானுக்கு மன்மதன் மலர்க்கணை எய்தல், நெற்றிக்கண் திறந்து சிவபெருமான் மதனை எரித்து விடும் காமதகனம், பிறகு ரதி, மன்றாடி மன்மதனின் உயிர் மீட்டல் என்று மூன்றுநாள் தொடக்கம் பத்துப் பதினைந்து நாட்கள் வரை ஆடப்படும் கூத்து காமன்கூத்து.

மலையகத்தின் பாரம்பரிய நாட்டுக்கூத்தான ரதிமன்மதன் கூத்தை, அதன் பாரம்பரிய மரபு சிதையாமல் நவீனப்படுத்தி மலையகப் பட்டினங்களிலும் கொழும்பிலும் காமன்கூத்தை ஆடிக்காட்டிய பெருமை செந்தூரன் அவர்களுக்குண்டு.

மாத்தளை கார்த்திகேசு தயாரித்த 'அவள் ஒரு ஜீவ நதி' திரைப்படத்தில் கிறிஸ்துவப் பாதிரியாராக வேடமேற்று நடித்துள்ளார் செந்தூரன்.




'ஓரிரு காட்சிகளிலேயே தோன்றினாலும் செந்தூரன் அவர்களது பாத்திரமும் அவரது பண்பான நடிப்பும் பரவசப்படுத்துகிறது' என்று பத்திரிகைகள் எழுதியிருந்தன.

ஹட்டன் ஹைலன்ட்ஸ் கல்லூரியில் திருச்செந்தூரன் ஆசிரியராகவும் இரா.சிவலிங்கம் அவர்கள் அதிபராகவும் இருந்து பணியாற்றிய நாட்கள் வரலாறு படைத்தவை.

ஹட்டன் சென். ஜோன் பொஸ்கோ, ஹைலன்ட்ஸ் கல்லூரி, மாத்தளை பாக்கியா வித்தியாலயம் - பண்டாரவளை சென்மேரிஸ் கல்லூரி ஆகியவைகளில் அதிபராக இருந்து மாணவர்களை சமூக உணர்வாளராக நெறிப்படுத்தியவர் அமரர் செந்தூரன் அவர்கள்.

ஒரு ஆசிரியராக, பிறகு அதிபராக இவர் சேவையாற்றிய காலங்களில் இவரால் உருவாக்கப்பட்ட மாணவர்கள். பலர் கலை, இலக்கியம், கல்வி, அரசியல் சமூக சேவை என்று இந்த மக்களின் வாழ்வியலோடு கலந்து நிற்பது எத்தனை மகிழ்வானது.

வி.டி.தர்மலிங்கம், பி.மரியதாஸ், எம்.வாமதேவன், பி. முத்தையா, தை. தனராஜ், சி.நவரட்ணம், மு.சிவலிங்கம், சாரல்நாடன், மு. கனகராஜ், மு. இராமலிங்கம் என்று இன்றைய மலையகம் மறக்கமுடியாத எத்தனையோ பேர் திருவாளர்கள் சிவலிங்கம் - செந்தூரன் என்னும் இரட்டைக் கல்விமான்களால் செதுக்கப்பட்டவர்கள்.

மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தின் ஆரம்பகாலத் தலைவராகப் பணியாற்றியவர் இவர். வீரகேசரியின் ஆசிரியர் குழுவில் பணியாற்றிய அமரர் கார்மேகம் அவர்களின் முயல்வுடன் வீரகேசரியும் மலைநாட்டு எழுத்தாளர் மன்றமும் இணைந்து நடத்திய முதல் சிறுகதைப் போட்டிக்கான நடுவர் குழுவில் ஒருவராகப் பணியாற்றி இருக்கின்றார்.

உரிமை எங்கே, நடுக்கடலில், சாமிக் கடன், போன்ற இவருடைய சிறுகதைகள் முக்கியமானவை.

ஆசிரியப் பணியிலிருந்து விலகி சமூக சேவை நிலையத்தில் முழுநேரத் தொண்டனாகத் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார்.


1983ன் இலங்கை இனக்கலவரம் இவரை தமிழகம் நோக்கி விரட்டியது. இவர் தமிழகம் சென்றபோது இலங்கை இந்திய ஒப்பந்தங்கள் மூலம் தாயகம் திரும்பியோர் சிலோன் காரர்களாகவும் - இனக்கலவரங்களால் புலம் பெயர்ந்தவர்கள் அகதிகளாகவும் தாயகத்தில் அலைக்கழிக்கப்பட்டு, வேதனை துன்பம் துயரம் என்று கிடக்கும் நிலைகண்டு மக்கள் மறுவாழ்வு மன்றம் அமைத்து அரசுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு உழைக்கத் தொடங்கினார்.

நீலகிரி மாவட்டத்தின் கோத்தகிரி, குன்னூர், ஊட்டி என்று தாயகம் திரும்பியோர் தேயிலை மலைகளில் மறுபடியும் தொழிலாளர்களாய் துயர்மிகு வாழ்வு நடத்தினர்.

அம்மக்களின் விடிவுக்காகப் பணியாற்ற மீண்டும் சிவலிங்கம் - செந்தூரன் அங்கும் இணைந்தனர்.

தாயகம் திரும்பிய மலையக மக்களுக்காக அவர்களின் உரிமைகளுக்காக, வறுமை நீக்கத்துக்காகப் போராடிய செந்தூரன் அவர்கள் 31.03.2001ல் திருச்சியில் அமரர் ஆனார்.

மலையக வரலாறு மறக்கமுடியாத ஒரு மகா மனிதர் அமரர் செந்தூரன் அவர்கள்.



theliwathai.joseph@thaiveedu.com